**கவனிக்க.**-2019.01.18 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2110 - 2019 පෙබරවාරි මස 08 වැනි සිකුරාදා - 2019.02.08

*2110 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 332 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 341 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2019, மாச்சு மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

329-B 81492-5,403 (2019/02)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலூவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லூத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலூவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

*எல்லூப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.*

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

*1.* ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

*2.* பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

*3.* பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

*4.* மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

*5.* பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

*6.* பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

*7.* வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலூம்.

*8.* பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லூமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

*9.* ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

*10.* கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லூமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

*11.* பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

*12.* பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

*13.* பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

*14.* தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

*15.* பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

*16.* பரீட்சார்த்தியல்லூத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லூத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லூவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லூ விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

தமிழ் மொழி மூலம் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் கோரப்படும் பிரிவு, பதவி மற்றும் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியினை திருத்தஞ் செய்தல் - கொழும்பு மாவட்டம்

2016.08.31 ஆந் திகதிய 2086 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் என்னால் பிரசுரிக்கப்பட்ட 08-948 ஆம் அறிவித்தலில் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் கோரப்படும் பிரிவு மற்றும் பதவி திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகப் பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி (தமிழ் மொழி) என திருத்தம் செய்கின்றேன். அதன் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியை 2019.03.08 ஆந் திகதி வரை நீடிக்கின்றேன்.

2. அவ்விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட ஏனைய விடயங்கள் அனைத்தும் அவ்விதத்திலேயே அதிகாரம் செலுத்தும் என தாழ்மையுடன் கருத்திற் கொள்ளவும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கொழும்பு | திம்பிரிகஸ்யாய | திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகப் பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி (தமிழ் மொழி மூலம்) | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கொழும்பு |

1-184

---

## கலாசார அலுவல்கள் திணைக்களம்

கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் வெற்றிடத்தினை நிரப்புவதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு தகைமையுடைய இலங்கை வாழ் விண்ணணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவி | வெற்றிடம் எண்ணிக்கை |
|---|---|
| கணினி தரவு பதிவாளர் | 04 |
| திட்ட ஒருங்கிணைப்பாளர் | 01 |
| புத்தகக் களஞ்சிய பொறுப்பாளர் | 01 |

02. **சேவையில் அமர்த்துதல் மற்றும் சேவை நிபந்தனைகள் :**

இந்த பதவி நிரந்தர, ஓய்வூதிய கொடுப்பனவுக்குட்பட்டது. இந்த பதவிக்காக உரித்தான ஓய்வூதியம் பற்றி அரசினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் தீர்மானத்திற்கு உட்படுதல் வேண்டும்.

சம்பள பிரிவு இலக்கம் : MN 01-2016
சம்பள நிலை : ரூபா 27,140 - 10 × 300 - 11 × 350 - 10 × 495 - 10 × 660 - ரூபா 45,540

03. **தகைமைகள் :**

(I) கல்வித் தகைமைகள் :

(அ) மொழித்திறன் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்கள் திறமைச் சித்தியுடன் கல்விப் பொதுத்தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

(ஆ) கல்வி பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சையில் சாதாரண பொதுப் பரீட்சை தவிர்ந்த ஏனைய பாடங்களில் குறைந்த பட்சம் ஒரு பாடமாவது சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

(இ) (1) திட்ட ஒருங்கிணைப்பாளர் - தொழில் துறைக்கு ஏற்ப தேசிய தொழிற்பயிற்சி திறமை (NVQ) 04 ஆம் மட்ட தகைமை பூரணப்படுத்தியிருத்தல் அல்லது உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பத்துடன்கூடிய நிறுவனங்களில் தொடர்புகொண்டு கருத்துக்கள் பெற்றுக் கொண்டதன் பின்பு மேற்குறிபிடப்பட்டுள்ள தொழில்நுட்ப தகைமைகள் அனைத்து விதத்திலும் சமனானது என மூன்றாம் நிலக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு தொழில்நுட்ப தகைமைகள் இருப்பின் விசேட தகைமையாகக் கருதப்படும்.

(2) (i) கணினி தரவு பதியுநர் - மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவகத்தில் 720 மணித்தியாலங்களுக்கு குறையாமல் கணினி பாடநெறியை பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்;

(II) தொழிற் தகைமைகள் : கணினி தகவல் தயாரித்தல்/தட்டச்சு/மனுகோரல் பற்றிய மூன்றாம் நிலைக் கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாடநெறியினை பூர்த்தி செய்திருத்தல் விசேட தகைமையாகக் கருதப்படும்;

(III) அனுபவம் .- குறித்த துறையில் பெற்றுள்ள அனுபவம் விசேட தகைமையாகக் கருதப்படும்;

(IV) உடற்தகைமை.- அனைத்து விண்ணப்பதாரியும் இலங்கையில் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியில் கடமையாற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(V) வேறு தகைமைகள்.-

1. விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;
2. விண்ணப்பதாரர் நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்;

04 வயதெல்லை.- 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச சேவையில் உள்ளவர்களுக்காக ஆகக்கூடிய வயதெல்லை பொருந்தாது.)

05. **ஆட்சேர்ப்பு முறை.-**

கலாசார அலுவல்கள் பணிப்பாளரின் நியமனத்திற்கு அமைவாக அனுமதிக்கப்பட்ட தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக் குழுவின் சிபார்சுக்கு அமைவாக சேர்த்துக் கொள்ளப்படுவர். உடற்தகைமை மற்றும் தகைமைகளை பரிசீலித்துப் பார்த்து புள்ளிகளின் திறமை அடிப்படையில் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைவாக இணைத்துக் கொள்ளப்படுவர்.

தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை

| மதிப்பீடு செய்து புள்ளிகள் வழங்கப்படும் விடயங்கள் | ஆகக்கூடிய புள்ளிகள் | பெற்றுக் கொண்ட புள்ளிகள் |
|---|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமை | 05 | பொருந்தாது |
| 2. மேலதிக தொழிற் தகைமை | 20 | |
| 3. மேலதிக அனுபவம் | 30 | |
| 4. கணினி அறிவு | 15 | |
| 5. ஆங்கில மொழி அறிவு | 15 | |
| 6. நேர்முகப் பரீட்சையின் போது காண்பிக்கப்பட்ட திறமைகள் | 05 | |
| மொத்தம் | 100 | |

06. விண்ணப்பப்படிவம் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு அமைவாக A4 (8.27cm × 11.69cm) அளவு கொண்ட தாளில் தயாரித்து 2019.02.22 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் "பணிப்பாளர், கலாசார அலுவல்கள் திணைக்களம், 08 ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் மற்றும் பூரணமல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். (விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிடவும்.)

கலாசார அலுவல்கள் பணிப்பாளர்.

கலாசார அலுவல்கள் திணைக்களம்,
08 ஆம் மாடி,
செத்சிறிபாய,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

அலுவலக உபயோகத்திற்காக

**கலாசார அலுவல்கள் திணைக்களம்**

................................... பதவிக்கான விண்ணப்பம்

1. முதல் எழுத்துக்களுடன் பெயர் : ......................................
2. முழுப் பெயர் : ............................
3. பிறந்த திகதி : ..................................
4. வயது (2019.02.22) ஆந் திகதிக்கு : வருடங்கள் : .................. மாதங்கள் :................. நாட்கள் :.............
5. தேசிய ஆளடையாள அட்டை இல. : ....................
6. பால் : (ஆண்/பெண்) : ................
7. முகவரி : ..............................
8. தொலைபேசி இலக்கம் :.............................
9. கல்வித் தகைமைகள் : .............................

(i) க.பொ.த. (சா.தரம்)

வருடம் சுட்டெண்

| பாடம் | பெற்ற சித்தி | பாடம் | பெற்ற சித்தி |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

(ii) க.பொ.த. (உ.தரம்)

வருடம் சுட்டெண்

| பாடம் | பெற்ற சித்தி |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

10. தொழில் தகைமைகள் :..........................................................................

11. அனுபவம் :........................................................................

இவ் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதில் உள்ள ஏதேனும் தகவல்கள் பொய்யானவை அல்லது பிழையானவை என தெரிவு செய்வதற்கு முன் நிரூபிக்கப்பட்டால் அதன் காரணமாக நான் இப்பதவிக்கு தகுதி அற்றவராகவும் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின் குற்றம் நிரூபிக்கப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் அறிவேன்.

.............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ..................................

2-420

---

## பொதுச் சேவைகள் ஆணைக்குழு

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்

## நிறைவேற்றுத்தர சேவை வகைப்பாட்டின் சட்ட அலுவலர் தரம் III பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்தில் சட்ட அலுவலர் பதவி வெற்றிடத்திற்கு பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு முறை :**

வர்த்தமானி அறிவித்தலில் கேட்கப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையினால் நடாத்தப்படும் கட்டமைப்பு ரீதியான நேர்முகப்பரீட்சைப் பெறுபேறுகளின் படி உயரிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரி வெற்றிடத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார். அங்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட (இலக்கம் 06 இல் குறிக்கப்பட்டுள்ள) புள்ளி வழங்கும் விதிமுறைகளுக்கு ஏற்ப கட்டமைப்பு ரீதியான நேர்முகப்பரீட்சை நடாத்தப்படும்.

2. **தேவையான தகைமைகள் :**

(i) **கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து சட்டம் சம்பந்தமான பட்டமொன்றை பெற்றிருத்தல் அல்லது உயர் நீதிமன்றமொன்றில் சட்டத்தரணியாக சத்திய பிரமாணம் செய்திருத்தல்.

(ii) **அனுபவம்**

இலங்கை உயர் நீதிமன்றமொன்றில் சத்தியப் பிரமாணம் செய்ததன் பின்பு மூன்று ஆண்டு காலத்திற்குக் குறையாத முனைப்புமிகு தொழில்சார் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

(iii) **உடல் தகைமைகள்**

சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எப்பாகத்திலும் கடமை புரிவதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்குமுரிய உடல் மற்றும் மனரீதியான ஆரோக்கியம் உடையவராதல் அவசியம்.

(iv) **வேறு தகைமைகள்**

* இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்;
* விண்ணப்பதாரிகள் உயரிய நன்னடத்தையுடையவர்களாக இருக்க வேண்டும்;
* பதவிக்குத் தேவையான சகல தகைமைகளையும் விண்ணப்பம் கோரப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடும் திகதிக்கு சகல தகைமைகளையும் எல்லா வகைகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும்:**

(i) இப்பதவி நிரந்தரமானது;

(ii) இப்பதவி ஓய்வூதியத்துடனானதாகும். உங்களுக்குரித்தான ஓய்வூதியத்திட்டம் சம்பந்தமாக அரசாங்கம் எடுக்கும் கொள்கை ரீதியான முடிவுக்கு நீங்கள் கட்டுப்படல் வேணடும். விதவைகள், தபுதாரர், அநாதைகள் நிதியத்துக்கு பங்களிப்புச் செய்ய வேண்டும். அரசாங்கம் காலத்துக்குக் காலம் நியமம் செய்யும் வகையில் நீங்கள் பங்களிப்பு நிதியைச் செலுத்த வேண்டும்.

(iii) இந்நியமனம் 03 வருட நன்னடத்தைக் காலத்திற்குட்பட்டதாகும். சட்ட அலுவலர் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 3 வருட காலத்துக்குள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு I ஆவது வினைத்திறன்காண் தடைத் தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iv) 2014.01.21 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் அதைத் தொடர்ந்து வந்த சுற்று நிருபங்களின் படியும் உரிய மொழித் தேர்ச்சியை பதவியில் சேர்ந்த 5 ஆண்டு காலத்திற்கு பெற்றுக் கொள்ள வேண்டும்.

(iv) இந்நியமனம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும் அரசாங்க நிதி ஒழுங்கு விதிகளுக்கும் அரசாங்கத்தால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் ஏனைய ஒழுங்கு விதிகளுக்கும் கட்டுப்பட்டதாகும்.

4. **வயதெல்லை :**

விண்ணப்ப முடிவுத் திகதிக்கு 21 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத்திட்டம்:**

பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இன்படி, இந்தப் பதவியுடன் தொடர்புபட்ட மாதாந்த வேதன அளவுத்திட்டம் ரூபா 47,615 -10 × 1,335 - 08 × 1,630 - 17 × 2,170 - ரூபா 1,10,895 (SL 1-2016) ஆகும். தங்களின் சம்பளமானது கூறப்பட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைவாகவும், இணைக்கப்பட்டுள்ள அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டவாறும் செலுத்தப்படும்.

6. கட்டடமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வில் கீழ்க்காணும் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.

| | விடயம் | | ஆகக் கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித் தகைமைகள்**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றிலிருந்தான சட்டமாணிப் பட்டம்<br><br>- முதல் வகுப்பில் சித்தி<br>- இரண்டாவது வகுப்பு மேல்நிலைச் சித்தி<br>- இரண்டாவது வகுப்பு கீழ்நிலைச் சித்தி<br><br>சட்டக் கல்லூரியில் இறுதி ஆண்டில் முதல் வகுப்பில் சித்தி<br>சட்டக் கல்லூரியில் இறுதி ஆண்டில் இரண்டாவது வகுப்பில் சித்தி<br><br>**குறிப்பு** : இறுதிப் பரீட்சையில் சிறப்பு நிலையில் சித்தியடைந்தால் மட்டுமே 10 புள்ளிகள் வழங்கப்படும்.<br><br>(அதியுயர் தகைமைக்கே புள்ளிகள் வழங்கப்படும். அதாவது பட்டம் அல்லது சட்டக் கல்லூரியிலிருந்தான தகைமை ) | <br><br><br>20<br>15<br>10<br><br>15<br>10 | 20 |

| | | | |
|---|---|---|---|
| 02 | **மேலதிக தொழில்சார் தகைமைகள்** | | 15 |
| | சட்டத்தில் கலாநிதிப் பட்டம் | 15 | |
| | சட்டத்தில் ஒரு வருடத்துக்குக் குறையாத பட்டபின்படிப்பு | 10 | |
| | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் குறிப்பிட்ட துறை சம்பந்தமாக ஒரு வருடத்துக்குக் குறையாத பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பாடநெறி அல்லது பட்டப் பின் படிப்பு சட்ட சம்பந்தமான டிப்ளோமா<br>(ஒரு டிப்ளோமாவுக்கு 5 புள்ளிகள் வீதம் உயர்ந்த பட்சம் 15 புள்ளிகள்) | | |
| | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் குறிப்பிட்ட துறை சம்பந்தமானக 6 மாதத்துக்குக் குறையாத டிப்ளோமா பாடநெறி<br>(ஒரு டிப்ளோமாவுக்கு 3 புள்ளிகள் வீதம் உயர்ந்த பட்சம் 15 புள்ளிகள்) | | |
| | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் குறிப்பிட்ட துறை சம்பந்தமாக 03 மாதத்திற்குக் குறையாத டிப்ளோமா பாடநெறி<br>(ஒவ்வொரு கற்கை நெறிக்கும் 2 புள்ளிகள் வீதம் உயர்ந்த பட்சம் 10 புள்ளிகள்) | | |
| 03 | **மேலதிக அனுபவம்** | | 30 |
| | சட்டத்தரணி ஒருவராக அரசாங்க சேவையில் அல்லது தனியார் துறையில் பெற்றுள்ள அனுபவம்<br>- வருடம் ஒன்றுக்கு 05 புள்ளிகள் வீதம் உயர்ந்த பட்சம் 30 புள்ளிகள்<br>- 6 மாதங்களுக்குக் கூடுதலானதும் ஒரு வருடத்திற்குக் குறைவானதும் 02 புள்ளிகள்<br>(அடிப்படைத் தகுதியைப் பெற்றுக் கொள்வதற்கு அவசியமான சட்டத்தரணி ஒருவராகப் பணியாற்றிய 05 வருட சேவைக் காலம் தவிர)<br>(20 வருடங்களுக்குக் குறையாத சேவைக்காலமொன்றைப் பூர்த்தி செய்துள்ள சட்டத்தரணி ஒருவரிடமிருந்து அல்லது சனாதிபதி சட்டத்தரணி ஒருவரிடமிருந்து அல்லது நீதிபதி ஒருவரிடமிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழ் ஒன்றின் மூலம் மேலதிக அனுபவத்தை நிரூபித்தல் வேண்டும். அலுவலக முத்திரை கட்டாயம் இடப்படுதல் வேண்டும்.) | | |
| 04 | **தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அறிவு** | | 15 |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டப்படிப்பில் பிரதானமான பாடமாக தொழில்நுட்பவியலைக் கற்றிருத்தல். | 15 | |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் ஒரு வருடத்துக்கு குறையாத அல்லது 1500 மணித்தியாலங்கள் கொண்ட தகவல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமாக பாடநெறி. | 10 | |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சான்றிதழ் கற்கை நெறி. | | |
| | - 6 மாதங்கள்/ 720 மணித்தியாலங்கள் | 07 | |
| | - 3 மாதங்கள்/360 மணித்தியாலங்கள் | 05 | |
| | (உயர்ந்த பட்ச தகைமையிற்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்) | | |

| | | | |
|---|---|---|---|
| 05 | **ஆங்கில மொழித் தேர்ச்சி** | | 15 |
| | ஆங்கில மொழி மூலம் பயின்ற பட்டப்பின்படிப்பு பட்டம் / பட்டம்/ பட்டப்பின்படிப்பு, சட்டமாணி பட்டம்/சட்டமாணி பட்டம் | 15 | |
| | (குறித்த பரீட்சை வினாப்பத்திரங்கள் அனைத்திற்கும் ஆங்கில மொழியில் பதிலளிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.) | | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்படட நிறுவனமொன்றின் ஆங்கில மொழி பற்றிய டிப்ளோமா கற்கை நெறி 01 வருடம் அல்லது 1500 மணித்தியாலங்கள்) | 10 | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் ஆங்கில மொழி பற்றிய சான்றிதழ் கற்கை நெறி | | |
| | 06 மாதங்கள்/720 மணித்தியாலங்கள் | 07 | |
| | 03 மாதங்கள்/360 மணித்தியாலங்கள் | 05 | |
| 06 | நேர்முகப் பரீட்சையில் காட்டப்படும் திறமைக்கு | | 05 |
| | மொத்தம் | | 100 |

7. **விண்ணப்பதாரர்களின் ஆளடையாளம் :**

விண்ணப்பங்களை சகல வகைகளிலும் பூர்த்தி செய்து அனுப்பும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

நேர்முகத் தேர்வின் போது சகல சான்றிதழ்களையும் உரிய முறையில் உறுதிப்படுத்தப்பட்ட அதன் பிரதிகளையும் சமர்ப்பிக்க வேண்டும்.

நேர்முகத் தேர்வின் போது தமது ஆள் அடையாளத்தை நிரூப்பிப்பதற்கு கீழ்க்காணும் ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய ஆள் அடையாள அட்டை ;
2. செல்லுபடியான கடவுச்சீட்டு.

8. **விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல்:**

(அ) விண்ணப்பப்படிவங்கள் 2019.03.08 ஆந் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்னர் பின்வரும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அத்திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

காணி ஆணையாளர் நாயகம்,
காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
இல. 1200/6, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை.

(ஆ) விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பி வைக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்தின் சட்ட அலுவலர் பதவிக்கு விண்ணப்பித்தல்" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவத்தில் இடப்பட்டுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பமானது அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்திப் பிரமாண ஆணையாளர், பிரசித்தி பெற்ற நொத்தாரிசு, முப்படையின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் அலுவலரொருவர் அல்லது 47,415 ரூவாவுக்குக் கூடிய வருடாந்த சம்பளத்தைக் கொண்ட அரச நிரந்தரப் பதவியொன்றை வகிக்கும் அலுவலரொருவர் சான்றுப்படுத்தல் வேண்டும்.

(ஈ) தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் கடமைபுரியும் அலுவலர்கள் தமது விண்ணப்பங்களை தான் கடமை புரியும் திணைக்களத் தலைவர் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும்.

(உ) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பப்பத்திரத்தின் மாதிரியமைப்பு இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப்படிவங்களை A4 அளவிலான தாளில் (அதன் முதற் பக்கத்தில் இல. 1 முதல் 8 வரைக்கும், 2 ஆவது பக்கத்தில் இல. 9 முதல் 13 வரைக்கும் எஞ்சியவற்றை 3 ஆவது பக்கத்திற்கும் என்ற வகையில்) தயாரித்து தமது சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும்.

9. தவறான தகவல்களைச் சமர்ப்பித்தல் :

விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரால் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தகவல் பிழையானது அல்லது தவறானதென்று ஆட்சேர்ப்பிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரது விண்ணப்பதாரர் நிலை இரத்துச் செய்யப்படும். ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் அத்தகைய பிழையானது அல்லது தவறான தகவல் கண்டுபிடிக்கப்பட்டால் உரிய சட்ட நடைமுறைகளுக்கு அமைவாக அரச சேவையிலிருந்து அவர் நீக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10. இப்பதவி வெற்றிடத்தை நிரப்புதல் அல்லது நிரப்பாமல் விடும் உரிமை அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு உண்டு.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் சட்ட அலுவலர் தரம் III பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்**

(அலுவலகப் பயன்பாட்டிற்கு மாத்திரம்)

1. முதலெழுத்துக்களுடனான பெயர் : திரு. /திருமதி /செல்வி -----.
சிங்களத்தில்/தமிழில் :-----.
ஆங்கிலத்தில் :-----.

1.1 முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர்கள் (தெளிவான எழுத்துக்களில்)
சிங்களத்தில்/தமிழில் :-----.
ஆங்கிலத்தில் :-----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

3. பிறந்த திகதி:-
ஆண்டு : ........................ மாதம்: ................ திகதி: ..................

3.1 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது:
வருடங்கள்:..................... மாதங்கள்:..................... நாட்கள்:.....................

4. பால் (ஆண்/பெண்) : -------

5. விவாகமானவரா/விவாகமாகாதவரா?:------

6. நிரந்தர முகவரி (தெளிவான எழுத்துக்களில்) :-----

7. தொலைபேசி இலக்கம் :-
நிலையான :-----
கையடக்க :-----

8. சட்டம் தொடர்பாகப் பெற்றுள்ள கல்வித் தகைமைகள் பற்றிய விபரம் :

(i) பல்கலைக்கழகம் :-----

(ii) பட்டம் வழங்கப்பட்ட திகதி :-----

9. உயர் நீதிமன்றில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்யப்பட்ட திகதி :-----

10. சட்டத்தரணியாக தேர்ச்சி பெற்ற அனுபவம் (வருடங்கள் எண்ணிக்கை) :-----

11. விண்ணப்பம் கோரியுள்ளபடி 06 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் :

(i) ................................
(ii) ................................
(iii) ................................
(iv) ................................
(v) ................................

12. தாங்கள் எப்போதாவது அல்லது ஏதாவது குற்றம் தொடர்பாக நீதிமன்றத்தில் குற்றவாளியாக தண்டிக்கப்பட்டுள்ளீரா ?
ஆம்/ இல்லை

12.1 ஆம் எனில், விபரங்களைச் சமர்ப்பிக்கவும் :-----.

13. விண்ணப்பதாரியின் உறுதியுரை:

(அ) இவ் விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் எனது அறிவுக்கு எட்டியவரையில் உண்மையானவை என்றும் சரியாவை என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் தரப்பட்டுள்ள வெளிப்படுத்துகை உண்மைக்குப் புறம்பானதென நிரூபிக்கப்படுமாயின் நான் சேவைக்கு உள்ளீர்க்கப்படுவதற்குத் தகுதியற்றவனாவேன் என்பதையும் நியமனம் கிடைத்த பின் அவ்வாறு நிரூபிக்கப்படுமாயின் பணி நீக்கம் செய்யப்படுவதற்கு உள்ளாவேன் என்பதையும் அறிவேன்.

(இ) இதனகத்துள்ள தகவல் எதனையும் பின்பு மாற்றியமைக்கமாட்டேன்.

.........................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி:-----.

14. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்:

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் ............................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும் அவர்....................... ஆந் திகதி எனது முன்னிலையில் மேற்படி பந்தி 13 இன் கீழ் கையொப்பமிட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

.........................................,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர்:-----.
பதவி :-----.
முகவரி :-----.
(பதவி வழி இலச்சினை மூலம் உறுதிப்படுத்தவும்).
திகதி:..................................................

15. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :

(அரசாங்க/மாகாண அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களுக்கு மட்டும்).

15.1 அலுவலரின் பெயர்வழிக் கோப்பின்படி விண்ணப்பப்படிவத்தை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு உடனடுத்த ஐந்து வருட காலத்துள் வேலை, நடத்தை, வருகை என்பன திருப்திகரமானவை/ திருப்திகரமற்றவை/ சகல சம்பள

ஏற்றங்களும் ஈட்டப்பட்டுள்ளன/ஈட்டப்படவில்லை. எந்தவொரு ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் உட்படுத்தப்படவில்லை/ உட்படுத்தப்பட்டுள்ளார்.

15.2 விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவுசெய்யப்படின் தற்போதைய பதவியிலிருந்து இந்த அலுவலரை விடுவிக்க முடியும்/ முடியாது. விண்ணப்பப்படிவத்தை சிபார்சு செய்கின்றேன்/சிபார்சு செய்யவில்லை.

.........................................,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி வழி இலச்சினையும்.

திகதி :----

2 - 260

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### கிராம அலுவலர் சேவையின் III ஆம் வகுப்பின் அலுவலர்களுக்கான கணினி அறிவைச் சோதிப்பதற்கான எழுத்துப் பரீட்சை மற்றும் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2019

1. கிராம அலுவலர் சேவையின் III ஆம் வகுப்பின் அலுவலர்களுக்கான தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு ஏற்புடையதான வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையொன்றும் கணினி ஆற்றலைப் பரீட்சிக்கும் எழுத்துமூலப் பரிசீலிப்பு ஒன்றும் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் 2019 ஆம் ஆண்டு மே மாதத்தில் நடாத்தப்படுமென்றும், அதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன என்றும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. கிராம அலுவலர் சேவையின் III ஆம் வகுப்பின் அலுவலர்களுக்கான இப்பரீட்சை கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், அனுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி எனும் நகரங்களில் மட்டும் நடாத்தப்படும். ஒவ்வொரு நகரத்திற்கும் உரிய இலக்கங்கள் கீழேயுள்ள அட்டவணையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இந்நோக்கத்திற்காக வரையறுக்கப்பட்ட நகரங்களில் மட்டுமே பரீட்சைகள் நடாத்தப்படும். விண்ணப்பப்படிவம் தொடர்பான தலைப்பு, இந்நகரங்களும் நகர இலக்கங்களும் பின்வரும் விளக்கத்தின்படி பூரணப்படுத்தப்படுதல் வேண்டும். விண்ணப்பிக்கப்பட்ட நகரம்/ நகரங்கள் பின்னர் மாற்றப்படுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. மேற்குறிப்பிடப்பட்ட எவையேனும் நிலையமொன்றிற்காகப் போதிய எண்ணிக்கையான பரீட்சார்த்திகள் இல்லாவிடின், அந்நிலையம் இரத்துச் செய்யப்பட்டு அதற்கண்மையிலுள்ள நிலையமொன்றுக்கு விண்ணப்பதாரர்கள் அனுப்பப்படுவர்.

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| மாத்தறை | 04 |
| யாழ்ப்பாணம் | 05 |
| மன்னார் | 06 |
| முல்லைத்தீவு | 07 |
| திருகோணமலை | 08 |
| மட்டக்களப்பு | 09 |
| குருநாகல் | 10 |
| அநுராதபுரம் | 11 |
| பதுளை | 12 |
| இரத்தினபுரி | 13 |
| கிளிநொச்சி | 14 |

பிரதேச செயலகம் மற்றும் அது அமைந்துள்ள மாவட்டம் தொடர்பான தகவல்கள் I ஆம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தாம் கோருகின்ற பிரதேச செயலகம் மற்றும் அதன் இலக்கம், மாவட்டம் மற்றும் அதன் இலக்கம்

அவ்வட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு சரியாக விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் குறிப்பிடுதல் வேண்டும். அதனைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. அவ்விபரங்களை பிழையாகக் குறிப்பிடுதல் காரணமாக விண்ணப்பதாரருக்கு ஏற்படுகின்ற எந்தவொரு நட்டம் தொடர்பாகவும் முன்வைக்கப்படுகின்ற கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்படாததுடன் பிரதேச செயலகம் மற்றும் அதன் இலக்கம் குறிப்பிடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3. (i) இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளரினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்துவது தொடர்பாக அவரால் விதிக்கப்பட்ட சட்டதிட்டங்களுக்குப் பரீட்சார்த்திகள் கட்டுப் படுவர்.

(ii) பரீட்சை பரீட்சார்த்திகளுக்கு விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள், வர்த்தமானி அறிவித்தலில் வேறாக அச்சிடப்பட்டுள்ளன. இச்சட்டங்கள் மீறப்படின் அவர்களுக்குப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்குக் கட்டுப்பட வேண்டி ஏற்படும்.

4. **தகைமைகள்.**- 2010.09.29 ஆந் திகதி தொடக்கம் அமுலக்கு வரும் கிராம அலுவலர்களைச் சேர்த்துக்கொள்ளும் நடைமுறையின்படி, கிராம அலுவலர் சேவையின் III ஆம் பிரிவுக்கு உள்ளீர்க்கப்பட்டுள்ள அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமை பெறுவர்.

5. **பரீட்சை நடைமுறை.**- விண்ணப்பதாரிகள் கீழ்க்காணும் விடயங்களை உள்ளடக்கிய எழுத்துப் பரீட்சையொன்றிற்குத் தோற்றுதல் வேண்டும் :

| | விடயம் | விடய இலக்கம் | புள்ளிகள் | நேரம் |
|---|---|---|---|---|
| 1. | அலுவலக முறைகளும் கணக்கீடுகளும் | 01 | 100 | 2 மணி |
| 2. | விடயம் தொடர்பான தொழில் அறிவு | 02 | 100 | 2 மணி |
| 3. | கணினிப் பரீட்சை | 03 | 100 | 1 1/ 2 மணி |

5.1 **அலுவலக முறைகளும் கணக்கீடுகளும் (விடய இலக்கம் 1)**

***அலுவலக முறைகள்.***- கிராம அலுவலர் அலுவலகத்திலும் அரச அலுவலகங்களிலும் உபயோகப்படுத்தப்படும் அடிப்படை அறிவு செயல் ரீதியாகப் பயன்படுத்தப்படும் ஆற்றலைப் பரீட்சித்தல் மற்றும் அரச ஆவணங்களைச் சிறப்பாக புரிந்துகொண்டு தெளிவானதும் சுருக்கப்பட்டதுமான குறிப்புகள் மூலம் தமது கருத்துகளையும்/ அவதானிப்புக்களை உறுதியான முறையில் சமர்ப்பிக்கும் ஆற்றல் மற்றும் விடயம் தொடர்பானவை பற்றி அறிக்கையொன்றினை வரைபு செய்யும் ஆற்றலும் பரீட்சிக்கப்படும்.

***கணக்கீடு.***- கிராம அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளுடன் தொடர்பான மற்றும் அரச அலுவலகங்களில் கடைப்பிடிக்கப்படும் அடிப்படைக் கணக்கீடுகள் மற்றும் கணக்கு முறைகளும் நிதி நிர்வாக ஏடுகளின் செயற்பாடுகள், வழங்குதல் பற்றிய நடைமுறை பற்றிய விளக்கம் மற்றும் அறிவு என்பன எதிர்பார்க்கப்படும்.

I ஆம் பாகம்.- சுருக்க விடைகள், எதிர்பார்க்கப்படும் கேள்விகள் உள்ளடக்கப்பட்டிருக்கும் கேள்வித்தாளிலேயே விடையளிக்கப்படுதல் வேண்டும். எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கப்படுதல் வேண்டும். (25 புள்ளிகள்)

II ஆம் பாகம்.- மூன்று வினாக்களைக் கொண்டு அமைக்கப்பட்ட கட்டுரை வடிவான ஒரு வினாப்பத்திரமாகும். மூன்று வினாக்களுக்கும் விடையளிக்கப்படுதல் வேண்டும். (75 புள்ளிகள்)

5.2 **விடயம் சார்ந்த தொழில் அறிவு (விடய இலக்கம் 02).**- கிராம அலுவலர்களுடன் தொடர்பான பல்வேறு சட்டங்கள் மற்றும் அமைச்சுகள், திணைக்களங்கள், மாகாண சபைகள் மற்றும் பிற அரசாங்க நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள கடமைகள் பற்றிய அறிவு பரீட்சிக்கப்படும்.

I ஆம் பாகம்.- குறும்பதில்கள் எதிர்பார்க்கப்படும் வினாக்களைக் கொண்டதாகும். வினாப்பத்திரத்திலேயே விடையளிக்கப்படுதல் வேண்டும். எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். (25 புள்ளிகள்)

II ஆம் பாகம்.- மூன்று வினாக்களைக் கொண்ட அமைப்பு ரீதியான கட்டுரை வடிவமைக்கப்பட்ட வினாப்பத்திரமொன்றாகும். மூன்று வினாக்களுக்கும் விடையளிக்கப்படுதல் வேண்டும். (75 புள்ளிகள்)

5.3 ***கணினிப் பரிசோதனை (பாட இலக்கம் 03).***- விண்ணப்பதாரிக்குப் பின்வரும் ஆற்றல்கள் உள்ளனவா எனப் பரீட்சிப்பதே இப்பரிசோதனையின் நோக்கமாகும் :

| | |
|---|---|
| | தகவற் தொழில்நுட்பம் தொடர்பான அடிப்படை எண்ணக்கருக்கள் WINDOWS பணி செயல்முறைமை கோவை முகாமைத்துவம் |
| சொல்முறை வழிப்படுத்தலைச் செயலாற்றல் (word processing) | அடிப்படைத் திறன்கள், திரைக்குப் பரீட்சயமாதல், உரைத் தொகுப்பு, உரைப் பகுதிகளை ஒழுங்குபடுத்தல், எழுத்துரு வகைகள், துணைப்பந்தி, பந்தி, Tab Settings, உரைப்பகுதியொன்றைத் தேடலும் மீளிடலும் அட்சர மற்றும் இலக்கண அமைப்புக் கோளாறுகள் திரையை சீரமைத்தல், பக்கத்தை அமைத்தல், பதிவுப் பதிப்பு, அட்டவணை அமைப்பு, ஒழுங்கு வரிசையில் அமைத்தல், கோவை முகாமைத்துவம் பதிவு ஒன்றை பல முகவரிகளுக்கு அனுப்பச் செய்தல், Macro பயன்பாடு |
| விரிவுத்தாள் அமைத்தல் (Spread sheet) | **அடிப்படைத் திறன்கள்**<br>மாதிரிப் படிவ அமைப்பு (formatting), சலாகைகளும் வீச்சுக்களும், புதியவற்றை உட்படுத்தலும் அகற்றுதலும், தரவுகளை ஒழுங்கு வரிசையில் அமைத்தல், வரைபுகளை அமைத்தல்.<br>அச்சுப் பதிப்பு, செயல் முறை, Macro பயன்பாடு, கோவை முகாமைத்துவம் |
| தரவுத்தளம் (Data base) | அறிமுகம், அடிப்படைத் திறன்கள், தரவுத்தளமொன்றை உருவாக்கலும் பயன்படுத்தலும், மாதிரிகள், ஒருங்கிணைக்கப்பட்ட மாதிரி, popup மாதிரி, தொடர்பாடல் மற்றும் செய்தி சதுரங்கள், பரிசீலனைகள், அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளல், Macro பயன்பாடு |
| முன்வைப்பு/ படக்குறிப்பு | அடிப்படைத் திறன்கள், பதிப்பு, மாதிரியமைப்பு திட்டம் அமைத்தல், தொடர்புரு, துளையுரு (Erforated), வரைபு முன்வைப்பு (Graphic Representation), Body support and Animation, முன்வைப்புக் கருவிகள் பயன்பாடு, மூலப்பிரதி அமைத்தல் (Master Body), Body Print மற்றும் குறிப்புக்கள் |
| இணையம் | இணையம் பற்றிய அறிமுகம், உலகெங்கும் பரந்திருக்கும் வலை யமைப்பு, Path I இனங்காணும் விதம், நடைமுறை இணையமைப்பு |
| மின்-அஞ்சல் | அறிமுகம், அடிப்படைத் திறன்கள், மின்னஞ்சலைப் பெற்றுக்கொள்ளல், மின்னஞ்சலை அனுப்புதல், அதற்குப் பதிலளித்தல், இணைப்புக்களின் உபயோகம் (Attachments), முகவரி களை இனங்காண்பதற்கான குறுவழிகள் (Shortcuts), செய்திகளைப் பெற்றுக் கொள்ளல் |

இவ்வினாப்பத்திரம் இரண்டு பாகங்களைக் கொண்டது.

I ஆம் பாகம்.- பல்வகை/சுருக்க விடைகள், 40 வினாக்களைக் கொண்டது. நேரம் : 45 நிமிடங்கள் (40 புள்ளிகள்)

II ஆம் பாகம்.- பாதியளவு அமைப்பு ரீதியான 5 கேள்விகளைக் கொண்டது. நேரம் : 45 நிமிடங்கள் (60 புள்ளிகள்)

***குறிப்பு***.- *2010.09.29 ஆந் திகதிய கிராம அலுவலர்களுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையின் இணைப்பு 2 இன் 8 ஆம் பந்திக்கமைய தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்பட்ட கணினிச் செயற்பாட்டு அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொண்டுள்ள அலுவலர்கள் அல்லது மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களினால் வெளியிடப்பட்ட கணினிச் செயற்பாட்டு அனுமதிப்பத்திரத்துக்குச் சமனான அல்லது அதற்கு மேலான தரத்தினைக் கொண்ட சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டுள்ள அலுவலர்கள் இக்கணினிப் பரீட்சையினை சித்தியெய்தும் தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்படுவர். மேலும், தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் கணினிப் பிரயோக உதவியாளர் சான்றிதழினை (NVQ - மட்டம் 3) பெற்றுக்கொண்டுள்ள அலுவலர்களும் எழுத்துப் பரீட்சையிலிருந்து விலக்களிப்புப் பெறலாம்.*

6. *சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மட்டும் இப்பரீட்சை நடாத்தப்படுமென்பதுடன் தொடர்பான சேவையில் சேர்வதற்கான பரீட்சைக்குத் தோன்றிய மொழியில் அல்லது அரச கரும மொழியொன்றில் அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும். போட்டிப் பரீட்சையொன்றின் சேவையில் சேர்ந்த அலுவலர்களுக்கும் தாம் கல்வி பெற்ற மொழி மூலம் அல்லது அரச கரும மொழியொன்றில் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும். பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் மொழியினைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.*

7. தாம் விருப்பமென்றால் ஒவ்வொரு விடயத்துக்காகவும் வெவ்வேறாக மற்றும் ஒவ்வொன்றும் வேறுபட்ட சந்தர்ப்பங்களில் அலுவலர்கள் தோற்ற முடியும். எவ்வாறெனினும் சித்தியடைவதற்காக ஒவ்வொரு விடயத்திலும் விதிக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளில் ஆகக்குறைந்தது நூற்றுக்கு நாற்பது வீத (40%) மாவது பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். எல்லாப் பாடங்களிலும் சித்தியடைந்து பரீட்சை பூரணத்துவப்படுத்தப்படும் ஆண்டில் பரீட்சை நடாத்தப்பட்ட இறுதித் தினம் இவ்வினைத் திறமைகாண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைந்த நாள் எனக் கருதப்படும்.

8. பரீட்சை முடிவுகள், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் என்னிடம் எனக்கு அறிவிக்கப்படுவதுடன், பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் பெயர்கள் மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஊடாக விண்ணப்பதாரர்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

9. விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப் பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கமைய இருத்தல் வேண்டும். அந்த மாதிரி விண்ணப்பப்படிவத்தின்படி விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப்படிவத்தை தயாரித்துக்கொள்ள வேண்டியதுடன் அதன்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் விண்ணப்பதாரர்களினால் தமது சேவைப் பிரிவுடன் தொடர்பான பிரதேச செயலாளர் ஊடாக 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 21 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடிய விதமாகப் **"பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு, (வெளிநாட்டுப் பரீட்சைப் பிரிவு), இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு"** எனும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் உரிய தகவல்கள் பூரணப்படுத்தப்பட்டில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

10. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்.**- பரீட்சார்த்தி கள் பரீட்சை மண்டபத்தில் சமுகமளிக்கும் எல்லாப் பாடங்களின் போதும் பரீட்சை மண்டப அதிகாரி திருப்தியடையும் விதத்தில் தமது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்படும், தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட பரீட்சை அனுமதிப்பத்திரத்துடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றை பரீட்சை மண்டப அதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும் :

(i) ஆட்கள் பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றைச் சமர்ப்பிக்க முடியாத விண்ணப்பதாரர்களின் பரீட்சார்த்தத் தன்மை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம்.

11. **விண்ணப்பங்கள்.**- மாதிரி விண்ணப்பத்தின் இலக்கம் 1.0 தொடக்கம் 4.0 வரையான பந்திகள் முதலாம் பக்கத்துக்கும், 5.0 தொடக்கம் 7.0 வரையான பந்திகள் இரண்டாம் பக்கத்துக்கும் உட்படக்கூடிய விதமாக A4 அளவிலான தாளில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் தட்டச்சுப் பொறியில் தயாரிக்கப்பட முடியுமெனினும், அதனைப் பிழையற்ற முறையிலும் தெளிவாகவும் விண்ணப்பதாரரின் கையெழுத்தினால் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் இத்துடனுள்ள மாதிரியின் அமைப்பிலேயே தயாரிக்கப்பட வேண்டியதுடன், ஒரு விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட வேண்டியது ஒரு விண்ணப்பம் மட்டும் என்பதுடன், விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதிகளை அனுப்ப வேண்டாமென அறிவிக்கப்படுகிறது. மாதிரி விண்ணப்பத்துக்குப் பொருத்தமற்ற மற்றும் முழுமையற்ற விதத்தில் தகவல் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் அறிவிக்கப்படாமல் நிராகரிக்கப்படும். பரீட்சைக்கான விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப் படிவங்களில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடவும். மேலும், பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஏற்றவாறு உள்ளதா என்பது பற்றி விண்ணப்பதாரர் கவனத்திற்கொள்ள வேண்டியதுடன், அவ்விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதி யொன்றைத் தம்மிடம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாக அமையும்.

12. முதற்தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அதிகாரிகளினால் எந்தப் பரீட்சைக் கட்டணமும் செலுத்தப்பட வேண்டியதில்லை. எவ்வாறெனினும் அதன் பின்னர் ஒரே தடவையில் அனைத்துப் பாடங்களுக்கும் தோற்றுவதாக இருந்தாலும் அல்லது இரண்டு பாடங்களில் தோற்றுவதாக இருந்தாலும் பரீட்சைக் கட்டணமாக 500 ரூபாவும், ஒரு பாடத்துக்காக மட்டும் அமர்வதெனின் பரீட்சைக் கட்டணம் 250 ரூபாவும் ஆகும். இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இல் சேரக்கூடிய விதமாகத் தீவின் எந்தவொரு தபால்

அல்லது உப தபால் அலுவலகத்திற்கு அல்லது மாவட்ட/ பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு விண்ணப்பதாரரின் பெயரிலேயே செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டு விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் ஒட்டப்படுதல் வேண்டும். மேலும் அதன் நிழற்படப் பிரதியொன்றைத் தம்மிடம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாக அமையும். எக்காரணம் கொண்டேனும் இக்கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது. இப்பரீட்சைக்காகச் செலுத்தப்படும் கட்டணம் வேறு எந்தப் பரீட்சைக்காகவும் மாற்றப்பட இடமளிக்கப்பட மாட்டாது. மேலும் பரீட்சைக் கட்டணத்திற்காக முத்திரை அல்லது பணம் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

13. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் எனும் ஊகத்தின் அடிப்படையில் விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக் கால அட்டவணையின் பிரதியொன்றுடன் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும். விண்ணப்பதாரியொருவருக்குப் பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுதல், அவர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் என்பதற்கான அங்கீகாரிப்பாக கருதப்படக்கூடாது. பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சை மண்டப அதிகாரியிடம் அவர்களது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அனுமதிப்பத்திரமின்றிப் பரீட்சைக்கு அமருவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதும் அதனைப் பற்றிக் குறிப்பிட்டு உடனே அறிவித்தலொன்று பரீட்சைத் திணைக்கள ஆணையாளரினூடாக பத்திரிகை மற்றும் பரீட்சைத் திணைக்கள இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

பரீட்சைக்கு 2 அல்லது 3 நாட்களுக்கு முன்னரேனும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் (திணைக்கள மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை)யுடன் விசாரித்தறிதல் வேண்டும். அத்தகைய விசாரிப்பினைச் செய்யும்போது விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பன தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரிகள் எனின் அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்தைக் குறிப்பிட்டு கூறப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தொலைநகல் இலக்கத்திற்கு கோரிக்கைக் கடிதம் ஒன்றை அனுப்புதல் கூடுதல் பயனுடையது. பரீட்சைகள் திணைக்களத்தினால் விசாரிக்கப்படும் சில விடயங்களை நிரூபிப்பதற்கென விண்ணப்பதாரியின் வசமிருக்கும் விண்ணப்பப்படிவத்தின் ஒரு பிரதி, பரீட்சைக் கட்டணப் பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் கடிதத்தினைப் பதிவுசெய்த பற்றுச்சீட்டு ஆகியவற்றை வைத்திருத்தல் உசிதமானது.

13.1 பரீட்சை அனுமதிப்பத்திரத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினால் உறுதிசெய்யப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தில் தனது சுட்டிலக்கத்தின்கீழ் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

14. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் உள்ள அலுவலர்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏற்ற வகையில் திணைக்களத் தலைவர்கள் கடமை விடுமுறை வழங்குதல் வேண்டும். போக்குவரத்துக் கட்டணங்கள் செலுத்தப்பட மாட்டாது.

15. பரீட்சையினை நடாத்துவது தொடர்பாகப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்குப் பரீட்சார்த்திகள் கட்டுப்படுவர். அச்சட்ட திட்டங்கள் மீறப்படின், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனையொன்றிற்கு உட்படுவதற்கு அவருக்கு ஏற்படுவதுடன், இப்பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டிராத, இவ்விடயத்துடன் தொடர்புடைய எவ்விடயம் பற்றியும் எனது முடிவு இறுதியான முடிவாகும்.

16. இவ்வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு இருப்பின் சிங்கள உரையே மேலோங்கும்.

எச். டி. கமல் பத்மசிறி,
செயலாளர்,
உள்ளக உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிகள் அமைச்சு.

உள்ளக உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிகள் அமைச்சு.
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2019, சனவரி 19.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**கிராம அலுவலர் சேவையின் வகுப்பு III இன் அலுவலர்களுக்கான கணினி அறிவினைச் சோதிப்பதற்கான எழுத்துப் பரீட்சை மற்றும் வினைத்திறன்காண் தடைத் தாண்டல் பரீட்சை - 2019**

Efficiency Bar Examination For Officers In Class III Of Grama Niladhari Service - 2019

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3

உரிய இலக்கத்தைக் கூண்டினுள் எழுதவும்.
(இதனை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.)

| | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| முதலாம் தெரிவு | 1 | |
| இரண்டாம் தெரிவு | 2 | |

(வர்த்தமானி அறிவித்தலின் 2.0 பந்தியின் படி தாங்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரங்களை விருப்புரிமை வரிசைப்படி குறிப்பிடுக.)
(இதனைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.)

1. 1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDANA)

1.2 விண்ணப்பதாரரின் முதலெழுத்துக்களை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : GUNAWARDANA, H. M. S. K.)

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. 2.1 பரீட்சை அனுமதிப் பத்திரம் அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.2 உரிய மாவட்டமும் மாவட்ட இலக்கமும் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்- உப பிரிவு 1 இல் குறிப்பிட்ட படி):----.

2.3 உரிய பிரதேச செயலாளர் பிரிவும், பிரதேச செயலாளர் இலக்கமும்
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்- உப பிரிவு 1 இல் குறிப்பிட்டபடி) :----.

2.4 உரிய மாவட்டமும் பிரதேச செயலாளர் பிரிவும் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

3. 3.1 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

3.2 பால்- பெண்/ ஆண் :
பெண் - 1
ஆண் - 0
(தொடர்பான இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

3.3 பிறந்த திகதி :-
ஆண்டு மாதம் திகதி

4. தாங்கள் இம்முறை பரீட்சையில் தோற்றும் விடயம்/விடயங்கள் (வர்த்தமானி அறிவித்தலின் 5 ஆம் பந்தியைப் பார்க்கவும்):

| தொடர் இலக்கம் | விடயம் | பரீட்சை இலக்கம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |

5. 5.1 உரிய தரம் :----.

5.2 பதவி :----.

5.3 தொடர்பான தரத்தில் நியமனம் பெற்ற திகதி :----.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

6. கவனித்தல் வேண்டும்.- வர்த்தமானி அறிவித்தலில் காண்பிக்கப்பட்டுள்ளபடி பரீட்சைக் கட்டணத்திற்காக விதிக்கப்பட்ட பணம் செலுத்தப்பட்டதாக தபால்/ உப தபால் அலுவலகத்தினால் விண்ணப்பதாரரின் பெயரிலேயே பெறப்பட்ட பற்றுச்சீட்டு இங்கு கழறாதவாறு ஒட்டப்படுதல் வேண்டும் :

பற்றுச்சீட்டு இலக்கம் :----.

தபால்/ உப தபால் அலுவலகம் :----.

திகதி :----.

பணம் ரூபா :----.

7. மேலே குறிப்பிடப்பட்ட விபரங்கள் சரியானவை என்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலங்களில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்கு உரித்துண்டு என்றும் குறிப்பிடுகின்றேன்.

மேலும் பரீட்சையினை நடாத்துவது தொடர்பாகப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்படுவதாகவும் குறிப்பிடுகின்றேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**பிரதேச செயலாளரின் உறுதிப்படுத்தல் :**

......................................... பிரதேச செயலாளர் பிரிவில் ......................................... கிராம அலுவலர் பகுதியில் கடமையாற்றும் கிராம அலுவலர் திரு./ திருமதி/ செல்வி ......................................... என்பவர்,

(i) என் முன்னிலையில் கையொப்பமிட்டாரென்றும்,

(ii) மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் பரீட்சித்துப் பார்க்கப்பட்டனவென்றும்,

(iii) அலுவலர்/ பெண் அலுவலர் இப்பரீட்சையில் தோற்றுவதற்குத் தகுதியானவரென்றும்,

(iv) முதலாவது அமர்வு காரணமாக பரீட்சைக் கட்டணத்திலிருந்து அலுவலர் விலக்களிக்கப்படுகின்றார்/ குறித்துரைக்கப்பட்ட பரீட்சைக் கட்டணப் பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது என்றும் நான் உறுதிப்படுத்துகின்றேன். (அவசியமற்றவற்றை வெட்டிவிடுக.).

-----,
பிரதேச செயலாளரின் கையொப்பமும்,
அலுவலக முத்திரையும்.

பெயர்:----.
பதவிப் பெயர்:----
முகவரி :-----.
திகதி :-----.

**அட்டவணை I**

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| கொழும்பு | 1103 | கொழும்பு 0 1 |
| கொலன்னாவை | 1106 | |
| கடுவெல | 1109 | |
| ஹோமாகம | 1112 | |
| ஹங்வெல்ல | 1115 | |
| பாதுக்க | 1118 | |
| மகரகம | 1121 | |
| ஸ்ரீஜயவர்தனபுர கோட்டே | 1124 | |
| திம்பிரிகஸ்யாய | 1127 | |
| தெஹிவளை | 1130 | |
| இரத்மலானை | 1131 | |
| மொரட்டுவை | 1133 | |
| கெஸ்பாவ | 1136 | |
| நீர்கொழும்பு | 1203 | கம்பஹா 0 2 |
| கந்தான | 1206 | |
| திவுலுப்பிட்டிய | 1209 | |
| மீரிகம | 1212 | |
| மினுவங்கொட | 1215 | |
| வத்தளை | 1218 | |
| ஜா-எல | 1221 | |
| கம்பஹா | 1224 | |
| அத்தனகல்ல | 1227 | |
| தொம்பே | 1230 | |
| மஹர | 1233 | |
| களனிய | 1236 | |
| பியகம | 1239 | |
| பாணந்துறை | 1303 | களுத்துறை 0 3 |
| பண்டாரகம | 1306 | |
| ஹொரண | 1309 | |
| இங்கிரிய | 1310 | |
| புலத்சிங்ஹள | 1312 | |
| மதுராவல | 1315 | |
| மிலனிய | 1318 | |
| களுத்துறை | 1321 | |
| பேருவல | 1324 | |
| தொடங்கொட | 1327 | |
| மத்துகம | 1330 | |
| அகலவத்த | 1333 | |
| பாலிந்தநுவர | 1336 | |
| வளல்லாவிட்ட | 1339 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| தும்பனை | 2103 | கண்டி 0 4 |
| பூஜாபிட்டிய | 2106 | |
| அக்குறணை | 2109 | |
| பாததும்பர | 2112 | |
| பன்னவல | 2115 | |
| உடதும்பர | 2118 | |
| மினிப்பை | 2121 | |
| மெததும்பர | 2124 | |
| குண்டசாலை | 2127 | |
| கங்கவட கோரளை | 2130 | |
| ஹலிஸ்பத்துவ | 2133 | |
| ஹதரலியத்த | 2134 | |
| யடிநுவர | 2136 | |
| உடுநுவர | 2139 | |
| தொலுவ | 2142 | |
| பாதஹேவாஹெட்ட | 2145 | |
| தெல்தொட | 2148 | |
| உடபலாத | 2151 | |
| கங்கஇஹள கோரளை | 2154 | |
| பஸ்பாகே கோரளை | 2157 | |

| | | |
|---|---|---|
| கலேவெல | 2203 | மாத்தளை 0 5 |
| தம்புள்ள | 2206 | |
| நாஉல | 2209 | |
| பள்ளேபொல | 2212 | |
| யடவத்த | 2215 | |
| மாத்தளை | 2218 | |
| அம்பகஹ கோரளை | 2221 | |
| யக்கல பள்ளேகம | 2224 | |
| வில்கமுவ | 2227 | |
| ரத்தொட்ட | 2230 | |
| உக்குவல | 2233 | |

| | | |
|---|---|---|
| கொத்மலை | 2303 | நுவரெலியா 0 6 |
| ஹங்குரன்கெத்த | 2306 | |
| வலப்பனை | 2309 | |
| நுவரெலியா | 2312 | |
| அம்பகமுவ | 2315 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| பெந்தோட்டை | 3103 | காலி 0 7 |
| பலபிட்டிய | 3106 | |
| கரந்தெனிய | 3109 | |
| எல்பிட்டி | 3112 | |
| நியாகம | 3115 | |
| தவலம | 3118 | |
| நெழுவ | 3121 | |
| நாகொடை | 3124 | |
| பத்தேகம | 3127 | |
| வெலிவிடிய-திவிதுர | 3130 | |
| அம்பலாங்கொடை | 3133 | |
| ஹிக்கடுவ | 3136 | |
| கடவத்ஸதர | 3139 | |
| போபே-போத்தல | 3142 | |
| அக்மீமன | 3145 | |
| யக்களமுல்ல | 3148 | |
| இமதுவ | 3151 | |
| கோனபீனுவல | 3154 | |
| ஹபராதுவ | 3157 | |
| பிடபெத்தர | 3203 | மாத்தறை 0 8 |
| கோடபொல | 3206 | |
| பஸ்கொட | 3209 | |
| முலடியன | 3212 | |
| அதுரலிய | 3215 | |
| அகுரஸ்ஸ | 3218 | |
| வெலிப்பிட்டிய | 3221 | |
| மாலிம்பட | 3224 | |
| கம்புறுபிட்டிய | 3227 | |
| ஹக்மன | 3230 | |
| கிரிந்த புஹுல்வெல்ல | 3233 | |
| திஹகொட | 3236 | |
| வெலிகம | 3239 | |
| மாத்தறை | 3242 | |
| தெவிநுவர | 3245 | |
| திக்வெல்ல | 3248 | |
| சூரியவெவ | 3303 | அம்பாந்தோட்டை 0 9 |
| லுணுகம்வெஹெர | 3306 | |
| திஸ்ஸமகாராம | 3309 | |
| அம்பாந்தோட்டை | 3312 | |
| அம்பலந்தோட்டை | 3315 | |
| அங்குனுகொலபெலஸ்ஸ | 3318 | |
| வீரகெட்டிய | 3321 | |
| கடுவன | 3324 | |
| ஓகேவெவ | 3327 | |
| பெலியத்த | 3330 | |
| தங்கல்ல | 3333 | |
| வலஸ்முல்ல | 3336 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| ஊர்காவற்துறை (தீவகம் வடக்கு) | 4103 | யாழ்ப்பாணம் 1 0 |
| சங்கானை (வலிகாமம் மேற்கு) | 4106 | |
| சண்டிலிப்பாய் (வலிகாமம் தென்மேற்கு) | 4109 | |
| தெல்லிப்பளை (வலிகாமம் வடக்கு) | 4112 | |
| உடுவில் (வலிகாமம் தெற்கு) | 4115 | |
| கோப்பாய்(வலிகாமம் கிழக்கு) | 4118 | |
| கரவெட்டி(வடமராட்சி) | 4121 | |
| மருதங்கேணி (வடமராட்சி கிழக்கு) | 4124 | |
| பருத்தித்துறை (வடமராட்சி வடக்கு) | 4127 | |
| சாவகச்சேரி (தென்மராட்சி) | 4130 | |
| நல்லூர் | 4133 | |
| யாழ்ப்பாணம் | 4136 | |
| வேலனை (தீவகம் தெற்கு) | 4139 | |
| தீவுப்பகுதி | 4142 | |
| காரைநகர் | 4145 | |

| | | |
|---|---|---|
| மன்னார் | 4203 | மன்னார் 1 1 |
| மாந்தை மேற்கு | 4206 | |
| மடு | 4209 | |
| நானாட்டான் | 4212 | |
| முசலி | 4215 | |

| | | |
|---|---|---|
| வவுனியா வடக்கு | 4303 | வவுனியா 1 2 |
| வவுனியா தெற்கு | 4306 | |
| வவுனியா | 4309 | |
| வென்கலசெட்டிகுளம் | 4312 | |

| | | |
|---|---|---|
| துணுக்காய் | 4403 | முல்லைத்தீவு 1 3 |
| மாந்தை கிழக்கு | 4406 | |
| புதுக்குடியிருப்பு | 4409 | |
| ஒட்டுசுட்டான் | 4412 | |
| கரைதுறைப்பற்று | 4415 | |
| வெலிஓய | 4418 | |

| | | |
|---|---|---|
| பச்சிளைப்பள்ளி | 4503 | கிளிநொச்சி 1 4 |
| கண்டாவளை | 4506 | |
| கரைச்சி | 4509 | |
| பூநகரி | 4512 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| கோரளைப்பற்று வடக்கு | 5103 | மட்டக்களப்பு 1 5 |
| கோரளைப்பற்று மேற்கு (ஓட்டமாவடி) | 5106 | |
| கோரளைப்பற்று வாழைச்சேனை | 5109 | |
| ஏறாவூர் பற்று | 5112 | |
| ஏறாவூர் நகரம் | 5115 | |
| மண்முனை வடக்கு | 5118 | |
| மண்முனை மேற்கு | 5121 | |
| காத்தான்குடி | 5124 | |
| மண்முனைப்பற்று | 5127 | |
| மண்முனை தென்மேற்கு | 5130 | |
| போரதீவுப்பற்று | 5133 | |
| மண்முனை தெற்கு | 5136 | |
| கோரளைப்பற்று தெற்கு | 5139 | |
| கோரளைப்பற்று மத்தி | 5142 | |
| தெஹியத்த கண்டிய | 5203 | அம்பாறை 1 6 |
| பதியதலாவ | 5206 | |
| மாஓய | 5209 | |
| உகன | 5212 | |
| அம்பாறை | 5215 | |
| நாவிதன்வெளி | 5216 | |
| சம்மாந்துறை | 5218 | |
| கல்முனை தமிழ் | 5224 | |
| சாய்ந்தமருது | 5225 | |
| காரைதீவு | 5227 | |
| நிந்தவூர் | 5230 | |
| அட்டாளைச்சேனை | 5233 | |
| இறக்காமம் | 5234 | |
| அக்கறைப்பற்று | 5236 | |
| ஆலையடிவேம்பு | 5239 | |
| தமன | 5242 | |
| திருக்கோவில் | 5245 | |
| பொத்துவில் | 5248 | |
| லாகுகல | 5251 | |
| கல்முனை முஸ்லிம் | 5254 | |
| பதவிசிறிபுற | 5303 | திருகோணமலை 1 7 |
| குச்சவெளி | 5306 | |
| கோமரங்கடவெல | 5309 | |
| மொரவெவ | 5312 | |
| பட்டினமும் சூழலும் | 5315 | |
| தம்பலகாமம் | 5318 | |
| கந்தளாய் | 5321 | |
| கிண்ணியா | 5324 | |
| மூதூர் | 5327 | |
| சேருவில | 5330 | |
| வெருக்கல ஈச்சிலம்பத்துவ | 5333 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| கிரிபாவ | 6103 | குருநாகல் 18 |
| கல்கமுவ | 6106 | |
| எஹத்துவெவ | 6109 | |
| அம்பன்பொல | 6112 | |
| கொடவெஹெர | 6115 | |
| ரஸ்நாயகபுர | 6118 | |
| நிகவரடிய | 6121 | |
| மஹவ | 6124 | |
| பொல்பிதிகம | 6127 | |
| இப்பாகமுவ | 6130 | |
| கணேவத்த | 6133 | |
| வாறியபொல | 6136 | |
| கொபய்கணே | 6139 | |
| பிங்கிரிய | 6142 | |
| பமுணாகொடுவ | 6149 | |
| மாஸ்பொத | 6151 | |
| குருநாகல் | 6154 | |
| மல்லவபிட்டிய | 6157 | |
| மாவத்தகம | 6160 | |
| ரீதிகம | 6163 | |
| வீரம்புகெதர | 6166 | |
| குளியாப்பிட்டி கிழக்கு | 6169 | |
| குளியாப்பிட்டி மேற்கு | 6172 | |
| உடுபத்தாவ | 6175 | |
| பண்ணல | 6178 | |
| நாரம்மல | 6181 | |
| அளவ்வை | 6184 | |
| பொல்கஹவெல | 6187 | |
| பண்டுவஸ்நுவர கிழக்கு | 6190 | |
| பண்டுவஸ்நுவர மேற்கு | 6193 | |

| | | |
|---|---|---|
| கற்பிட்டி | 6203 | புத்தளம் 19 |
| வனாதவில்லுவ | 6206 | |
| கருவலகஸ்வெவ | 6209 | |
| நவகத்தேகம | 6212 | |
| புத்தளம் | 6215 | |
| முந்தல் | 6218 | |
| மஹா கும்புக்கடவல | 6221 | |
| ஆனமடுவ | 6224 | |
| பள்ளம | 6227 | |
| ஆரச்சிகட்டுவ | 6230 | |
| சிலாபம் | 6233 | |
| மாதம்பை | 6236 | |
| மகாவெவ | 6239 | |
| நாத்தாண்டிய | 6242 | |
| வென்னப்புவை | 6245 | |
| தங்கொட்டுவ | 6248 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| பதவிய | 7103 | அநுராதபுரம் 2 0 |
| கெபிதிகொல்லாவ | 7106 | |
| மதவாச்சி | 7109 | |
| மஹவிலச்சிய | 7112 | |
| மத்திய நுவரகம் பளாத | 7115 | |
| ரம்பேவ | 7118 | |
| கஹடகஸ்திகிலிய | 7121 | |
| ஹொரவபொத்தான | 7124 | |
| கலென்பிந்துனுவெவ | 7127 | |
| மிஹிந்தலை | 7130 | |
| கிழக்கு நுவரகம் பளாத | 7133 | |
| நாச்சியதுவ | 7136 | |
| நொச்சியாகம | 7139 | |
| ராஜாங்கனை | 7142 | |
| தம்புத்தேகம | 7145 | |
| கலாவ | 7148 | |
| திரப்பனை | 7151 | |
| கெகிராவ | 7154 | |
| பளுகஸ்வெவ | 7157 | |
| இப்பாகமுவ | 7160 | |
| கல்னேவ | 7163 | |
| பலாகல | 7166 | |

| | | |
|---|---|---|
| ஹிங்குராங்கொட | 7203 | பொலன்னறுவ 2 1 |
| மெதிரிகிரிய | 7206 | |
| லங்காபுர | 7209 | |
| வெலிகந்தை | 7210 | |
| திம்பலாகம | 7212 | |
| தமன்கடுவ | 7215 | |
| எலஹர | 7218 | |

| | | |
|---|---|---|
| மகியங்கனை | 8103 | பதுளை 2 2 |
| ரீதிமாலியத்தை | 8106 | |
| மீகஹகிவுல | 8109 | |
| கன்தகெடிய | 8112 | |
| சொர்ணாதோட்டை | 8115 | |
| பசறை | 8118 | |
| லுனுகல | 8119 | |
| பதுளை | 8121 | |
| ஹாலி எல | 8124 | |
| ஊவா-பரணகம | 8127 | |
| வெலிமடை | 8130 | |
| பண்டாரவளை | 8133 | |
| எல்ல | 8136 | |
| அப்புத்தளை | 8139 | |
| ஹல்தும்முல்ல | 8142 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| பிபில | 8203 | மொனராகல 2 3 |
| மடுல்ல | 8206 | |
| மெதகம | 8209 | |
| சியம்பலாண்டுவ | 8212 | |
| மொனராகல | 8215 | |
| படல்கும்புர | 8218 | |
| புத்தல | 8221 | |
| வெள்ளவாய | 8224 | |
| கதிர்காமம் | 8227 | |
| தனமல்வில | 8230 | |
| செவனகல | 8233 | |

| | | |
|---|---|---|
| எஹலியகொடை | 9103 | இரத்தினபுரி 2 4 |
| குருவிட்ட | 9106 | |
| கிரிஎல்ல | 9109 | |
| இரத்தினபுரி | 9112 | |
| இம்புல்பே | 9115 | |
| பலாங்கொடை | 9118 | |
| ஓபநாயக | 9121 | |
| பெல்மதுளை | 9124 | |
| எலபத்த | 9127 | |
| அயகம | 9130 | |
| கலவான | 9133 | |
| நிவிதிகல | 9136 | |
| கஹவத்த | 9139 | |
| கொடகவெல | 9142 | |
| வெலிகேபொல | 9145 | |
| எம்பிலிபிட்டிய | 9148 | |
| கொலன்ன | 9151 | |

| | | |
|---|---|---|
| ரம்புக்கணை | 9203 | கேகாலை 2 5 |
| மாவனல்ல | 9206 | |
| அரணாயக | 9209 | |
| கேகாலை | 9212 | |
| கலிகமுவ | 9215 | |
| வரகாபொல | 9218 | |
| ருவன்வெல்ல | 9221 | |
| புளத்கொஹுபிட்டிய | 9224 | |
| யட்டியாந்தொட்டை | 9227 | |
| தெஹிவெத்தர | 9230 | |
| தெரணியகலை | 9233 | |

## நீதிச் சேவை ஆணைக்குழு

## அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவைக்குரிய இலங்கை நீதிமன்ற பதிவாளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை (எழுத்து) – 2018 (2019)

இலங்கை நீதிமன்ற பதிவாளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்காக தகைமையுடைய இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. இப்பரீட்சை மூலம் இலங்கை நீதிமன்ற பதிவாளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்படும்.

**எழுத்துப் பரீட்சை** :- இப்பரீட்சையானது நான்கு (04) வினாப்பத்திரங்களைக் கொண்டதாகும்.

| | வினாப்பத்திரம் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைய பெற வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01. | பொது அறிவு மற்றும் நுண்ணறிவு | 02 மணித்தியாலங்கள் | 100 | 40 |
| 02. | நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| 03. | ஆங்கில மொழித் தேர்ச்சி | 1 ½ மணித்தியாலங்கள் | 100 | 40 |
| 04. | இலங்கையின் பொருண்மை மற்றும் நடவடிக்கைமுறைச் சட்டங்கள் | 01 மணித்தியாலம் | 100 | 40 |

**பரீட்சைத்திகதி :-**

இப்பரீட்சையானது 2019 மே மாதத்தில் அட்டவணை I இல் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களில் அமைக்கப்படவுள்ள பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படும். இப்பரீட்சையினை ஒத்தி வைக்கும் அல்லது செல்லுபடியற்றதாக்கும் அதிகாரம் நீதிச்சேவை ஆணைக்குழுவின் ஆலோசனைக்கு அமைய நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு உள்ளது.

இப்பரீட்சையானது அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் மாத்திரம் நடைபெறும். அவ்வட்டவணைக்கு அமைய பரீட்சைக்கு தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரத்தினை தெரிவு செய்ய வேண்டியதுடன் விண்ணப்பப்படிவத்தில் பரீட்சைக்கு தோற்ற விரும்பும் நகரம் மற்றும் அதற்குரிய நகர இலக்கம் என்பவற்றை அட்டவணை I இற்கு அமைவாக சரியாக குறிப்பிடல் வேண்டும். வேண்டுகோள் விடுக்கும் நகரத்தில் அவ்வாவணத்திற்கு அமைவாக விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக்கு தோற்ற வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக்கு தோற்ற விரும்பும் நகரத்தினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. யாதேனுமொரு நகரமொன்றில் பரீட்சை நிலையமொன்றை அமைப்பதற்கு போதியளவு விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காத நிலையில் அவ்விண்ணப்பதாரிகள் அவர்களது இரண்டாம் தெரிவாக குறிப்பிட்டுள்ள நகரில் அல்லது அண்மித்த வேறொரு நகரில் அமைக்கப்படும் பரீட்சை நிலையமொன்றில் தோற்றுவதற்கு இடமளிக்கப்படுவதுடன் பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப உத்தேசித்துள்ள நகரங்கள் அனைத்திலும் அல்லது அதனை விட அதிகமான நகரங்களில் பரீட்சை நிலையங்களை அமைப்பதற்கு போதியளவு விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காத நிலையில் பரீட்சையினை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**நேர்முகப் பரீட்சை :**

பரீட்சையில் சகல பாடங்களிலும் சித்தி பெற்ற அபேட்சகர்களில் உயர் புள்ளிகளை பெற்றுக் கொண்ட அபேட்சகரிலிருந்து கீழ் நோக்கிய புள்ளி ஒழுங்கினை பின்பற்றி, தகைமைகளை பரீட்சிக்கும் நேர்முகப்பரீட்சையின் பின்னர் அப்பரீட்சைக்காக ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமமான விண்ணப்பதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படலாம். எவ்வாறாயினும் குறித்த வெற்றிடங்களை நிரப்பாமலிருப்பதற்கான தீர்மானத்தை நீதிச்சேவை ஆணைக்குழு எடுக்க முடியும்.

02. **சேவை நிபந்தனைகள்**

2.1 பகிரங்க சேவையின் நியமனத்தை கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2088/26 ஆம் இலக்க மற்றும் 2018.09.11 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிக்கையில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் தொடர்பிலான பிரமாணக் குறிப்பில்

விதிக்கப்பட்டுள்ள நியமங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கும், அப்பிரமாணக்குறிப்பிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களுக்கும், தாபன விதிக்கோவை, நிதிப்பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கும் அமைவாக தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் நீதிமன்ற பதிவாளர் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்படுவார்கள்.

2.2 இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்திற்குரியது. அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவைக்குரிய உத்தியோகத்தர்களின் பதவிகள் ஓய்வூதியத்துடனானவை என மேலே குறிப்பிடப்பட்டிருந்தாலும் எதிர்காலத்தில் இலங்கை நீதிமன்ற பதிவாளர் சேவையின் தரம் III இற்கு நியமனம் பெறும் உத்தியோகத்தர்களுக்குரிய ஓய்வூதிய முறைமையானது அரசாங்கத்தினால் மற்றும் / அல்லது நீதிச்சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு அமைய நிர்ணயிக்கப்படும்.

2.3 இந்நியமனமானது மூன்று வருட தகுதிகூர் காலத்தைக் கொண்டதாகும். இலங்கை நீதிமன்ற பதிவாளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்க்கப்பட்டு 06 வருடங்களுக்குள் பிரமாணக்குறிப்பின் 8.13 இல் குறிப்பிடப்பட்டுள்ளதற்கமைய வினைத்திறன் காண் தடைத்தாண்டல் பரீட்சையில் சித்தி பெறல் வேண்டும்.

2.4 பொது நிர்வாகச் சுற்று நிருபம் 01/2014, அதற்கு மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கு அமைவாக நீதிச் சேவை ஆணைக்குழுவின் 396 ஆம் இலக்க சுற்றுநிருபம் மற்றும் அதற்கு மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கு அமைவாக இலங்கை நீதிமன்ற பதிவாளர் சேவையின் தரம் III இன் உரிய நிலைக்கு ஏற்ப பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்டு **05** வருடங்களுக்குள் உரிய அரச கரும மொழித் தேர்ச்சியினை பெற்றுக்கொள்ள வேண்டும்.

2.5 நீதிச்சேவை ஆணைக்குழுவின் கட்டளைக்கு அமைவாக, தமக்கு வழங்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்பதற்கு தவறும் மற்றும் / அல்லது நியமனம் பெற்ற பதவியில் அல்லது நியமனம் வழங்கப்பட்ட பிரதேசத்தில் கடமைகளை பொறுப்பேற்க மறுக்கும் அல்லது புறக்கணிக்கும் விண்ணப்பதாரிகளின் நியமனத்தை செல்லுபடியற்றதாக்குவதற்கான அதிகாரம் உள்ளது.

03. மாதாந்த சம்பள அளவு : 03/2016 மற்றும் அதற்கு இயைபாக நீதிச் சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 2016.06.24 ஆந் திகதிய நீதிச் சேவை ஆணைக்குழுவின் 386ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கு அமைவாக அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவைக்குரிய இலங்கை நீதிமன்ற பதிவாளர் சேவையின் தரம் III இற்குரிய மாதாந்த சம்பள அளவு (MN 7-2016) ரூபா 41,580 – 11 x 755 – 18 x 1,030 – ரூபா 68,425 (ஆரம்ப சம்பள படிநிலை 03 - ரூ. 43,090) ஆவதுடன் அச்சம்பளம் 2020.01.01 ஆந் திகதி தொடக்கம் உங்களுக்கு உரித்தாகும். மேற்குறிப்பிட்ட சுற்றுநிருபத்தின் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படி நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து சம்பளம் வழங்கப்படும்.

04. **ஆட்சேர்ப்பு தகைமைகள்**

அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற பதிவாளர் தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்காக கீழ்வரும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(அ) i. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

ii. விண்ணப்பதாரி சிறந்த நன்நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

iii. அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் சேவைக்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்படும் சகல விண்ணப்பதாரிகளும் நாட்டின் அனைத்து பாகங்களிலும் கடமையாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உடல், உள ரீதியான ஆரோக்கியம் உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

(ஆ) உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல் வேண்டும்.

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகத்திடமிருந்து அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டம் வழங்கக்கூடிய நிறுவனமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிறுவனத்திடமிருந்து பட்டம் பெற்றிருத்தல் அல்லது அதற்கு சமமான தகைமையாக நீதிச்சேவை ஆணைக்குழு ஏற்றுக்கொள்ளும் தகைமையினை பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு –** உயர்நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த திகதி அல்லது பட்டப்படிப்பினை நிறைவு செய்து பெற்ற பட்டம் வலுவிற்கு வரும் திகதியானது விண்ணப்பப்படிவங்கள் கோரப்படும் இறுதித்திகதிக்கு அல்லது அத்திகதிக்கு முன்னரான திகதியொன்றாக இருத்தல் வேண்டும்.

(ஈ) **வயது** : 22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(அதற்கமைவாக 1997.02.08 திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1974.02.08 ஆந் திகதி அல்லது அதற்கு பின்னர் பிறந்தவர்களுக்கு மாத்திரம் விண்ணப்பிக்க தகைமை உள்ளது.)

(தற்போது பகிரங்க சேவையில், மாகாண அரச சேவையில் மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட அரச சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.)

**கவனிக்க. –** சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்குரிய தகைமைகளை வர்த்தமானப்பத்திரிகையின் திகதியாகிய 2019 பெப்புருவரி 08 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

05. **பரீட்சைக் கட்டணம்** - பரீட்சைக் கட்டணம் **ரூ.600** ஆகும். இக்கட்டணத்தை "நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர்" பெயரில் மக்கள் வங்கி, டாம் வீதிக் கிளையில் பேணிச் செல்லப்படும் 297 100 199 025 039 கணக்கில் வைப்பிலிட்டு பெற்றுக் கொண்ட வைப்புச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய கூட்டினுள் அகற்ற முடியாத வகையில் ஒட்டுதல் வேண்டும். (வைப்புச்சீட்டின் நிழற்பிரதி ஒன்றை உங்கள் வசம் வைத்துக் கொள்ளவும்.)

06. **விண்ணப்பிக்கும் முறை –**

(அ) விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட வேண்டியதுடன், 8 ½" x 12" (A4) அளவுடைய கடதாசியின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பதாரியின் கையெழுத்தினால் விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். இதற்காக கணினியினால் தயாரிக்கப்பட்ட அல்லது தட்டெழுத்து செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பயன்படுத்தலாம்.

மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் முழுமையான தகவல்களைக் கொண்டிராத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதியொன்றினை உங்கள் வசம் வைத்துக் கொள்ளவும்.) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் இப்பரீட்சை அறிவித்தலில் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளமையினை விண்ணப்பதாரி உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அவ்வாறில்லாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

(ஆ) விண்ணப்பப்படிவமானது விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்ற விரும்பும் மொழி மூலத்திலேயே தயாரிக்கப்படல் வேண்டும்.

(இ) பரீட்சைக்காக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை பதிவுத் தபாலில் **2019, மார்ச் மாதம் 11 திகதி** அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் **"செயலாளர், நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம், கொழும்பு 12"** என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தை கொண்ட கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் **"அட்டவணைப்படுத்த அரச உத்தியோகத்தர் சேவைக்குரிய நீதிமன்ற பதிவாளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்காக நடத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சை – 2018 (2019)"** என்பதனை தெளிவாக எழுத வேண்டும். மேற்குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

(ஈ) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பமானது அரச பாடசாலையின் அதிபர் ஒருவரினால், சத்திய ஆணையாளரினால், சட்டத்தரணி ஒருவரினால், பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால், முப்படையின் அதிகாரி ஒருவரினால், பொலிஸ் சேவையில் கெசட் படுத்தப்பட்ட பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் அல்லது பகிரங்க சேவையின் நிரந்தரப் பதவியொன்றை வகிக்கும் பதவிநிலை தரத்திற்குரிய உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

(உ) எல்லா விதத்திலும் முழுமையற்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். தபாலிடப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் தொலைதல் மற்றும் தாமதமாக கிடைக்கப்பெறல் என்பவற்றுடன் தொடர்புடையதாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

(ஊ) விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெற்றமை தொடர்பில் அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டதும் அது தொடர்பிலான அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் பத்திரிகைகளில் மற்றும் திணைக்களத்தின் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு இரண்டு அல்லது மூன்று நாட்கள் கடந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப் பெறாவிடின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும் போது விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பவற்றை குறிப்பிடல் வேண்டும். கொழும்பிற்கு வெளியே வதியும் விண்ணப்பதாரி

எனின் இவ்விபரங்களுடன் தொலைநகல் ஊடாக அனுமதி அட்டையின் பிரதி ஒன்றை பெறுவதற்கு ஏற்ற வகையில் விண்ணப்பதாரியின் தொலை நகல் இலக்கங்களையும் குறிப்பிட்டு கோரிக்கை கடிதமொன்றை **0112784232** என்ற தொலைநகல் இலக்கம் ஊடாக இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்புவதுடன் அது தொடர்பில் விசாரித்தலும் பயன்மிக்கதாக இருக்கும். மேலும் பரீட்சைகள் திணைக்களத்தினால் கேட்கப்படும் தகவல் ஒன்றை உறுதிப்படுத்துவதற்காக விண்ணப்பதாரி வசமுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு மற்றும் விண்ணப்பப்படிவத்தை பதிவுத்தபாலில் அனுப்பியதனை உறுதிப்படுத்தும் பற்றுச்சீட்டினையும் தயாராக வைத்துக் கொள்ளல் பயனுள்ளதாக அமையும்.

பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணங்கள் எக்காரணத்திற்காகவும் மீளளிக்கப்படாததுடன் வேறு பரீட்சையொன்றுக்காக மாற்றப்படாததுடன் மீளளிக்கவும்படமாட்டாது. காசுக்கட்டளைகள் மற்றும் முத்திரைகள் பொறுப்பேற்கப்படமாட்டாது.

07. **பரீட்சைக்கு உள்நுழைதல்.**

(அ) எல்லா விதத்திலும் முழுமையான விண்ணப்பப்படிவத்தை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை வழங்கப்படும். தமது அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது.

(ஆ) பரீட்சார்த்திகள் தங்களுக்கு குறித்துரைக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். அனைத்து பரீட்சார்த்திகளும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்டு, உரிய பரீட்சை மண்டபத்திற்குரிய அனுமதி அட்டையினை பரீட்சைக்கு தோற்றும் முதலாம் நாள் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும். இவ்வர்த்தமானப் பத்திரிகையின் ஆரம்பத்தில் சகல விண்ணப்பதாரிகளும் பின்பற்ற வேண்டிய சட்டதிட்டங்களின் தொகுதியொன்று குறிப்பிடப்பட்டுள்ளது. பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நடாத்துவதுடன் தொடர்புடையதாக விதிக்கப்படும் விதிகளுக்கு பரீட்சாத்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அவ்விதிகளை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

**குறிப்பு –** விண்ணப்பதாரி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்படுதலானது அவ் விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்றவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொண்டதாக கருதப்படமாட்டாது.

08. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**

பரீட்சார்த்தி ஒருவர் தாம் தோன்றும் எல்லா விடயதானங்கள் தொடர்பாகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

அ) தேசிய அடையாள அட்டை;
ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
இ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

09. **பொய்யான தகவல்களை சமர்ப்பிப்பதால் வழங்கப்படும் தண்டனை**

விண்ணப்பதாரி ஒருவர் தகைமைகளை கொண்டிருக்கவில்லை என பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் காலத்தில் அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது ஏதேனும் சந்தர்ப்பத்தில் தெரியவருமாயின் அவருடைய பரீட்சார்த்தத் தன்மை இரத்துச் செய்யப்படும். அபேட்சகர் ஒருவர் வேண்டுமென்றே பொய்யான தகவல்களை வழங்கியுள்ளமை தெரியவருமாயின் அல்லது ஏதேனும் முக்கியமான விடயமொன்றை வேண்டுமென்றே மறைத்திருப்பின் பகிரங்க சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு வாய்ப்புள்ளது.

பரீட்சையை நடாத்துதல், பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிகளுக்கு பரீட்சாத்திகள் கீழ்படிதல் வேண்டும். அவ்விதிகளை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

10. இவ் ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்படாத விடயங்கள் ஏதுமிருப்பின் அவ்விடயங்கள் தொடர்பாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் ஆலோசனைக்கு அமைய நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு ஏற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

11. அ) பரீட்சை சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் நடைபெறும்.

ஆ) விண்ணப்பதாரி ஒருவர் தகைமைப்பெற்ற பட்டப்படிப்பினை பூர்த்தி செய்த மொழி மூலம் அல்லது அரச கரும மொழி மூலமே பரீட்சைக்கு தோற்ற வேண்டும்.

இ) விண்ணப்பதாரி ஒருவர் தகைமை பெற்ற பட்டத்தின் விடயங்களை இரண்டு மொழிகளில் அல்லது அதனை விட அதிகமான மொழிகளில் சித்தியடைந்திருப்பின் அப்பட்டப்படிப்பில் அதிகமான விடயங்களை சித்தி பெற்ற மொழி மூலம் அல்லது அரச கரும மொழி மூலமே பரீட்சைக்கு தோற்ற வேண்டும்.

ஈ) பிரதான விடயம் ஒரு மொழியிலும், மேலதிக விடயம் மற்றொரு மொழியிலும் சித்திபெற்றுள்ள விசேட பட்டத்தினை கொண்ட விண்ணப்பதாரி ஒருவர் பிரதான விடயத்தில் சித்தி பெற்ற மொழி மூலம் அல்லது அரச கரும மொழி மூலமே பரீட்சைக்கு தோற்ற வேண்டும்.

**குறிப்பு :**

i. சகல விண்ணப்பதாரிகளும் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் விடையளிக்க வேண்டும்.

ii. விண்ணபப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக்கு தோற்றும் மொழியினை மாற்றுவதற்கு விண்ணப்பதாரிகளுக்கு இடமளிக்கப்படமாட்டாது.

iii. பரீட்சை பெறுபேறுகள் - தபால் மூலமாக அல்லது www.results.exams.gov.lk இணையத்தளம் ஊடாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை பெறுபேறுகள் அறிவிக்கப்படும்.

12. **எழுத்துப்பரீட்சைக்கான பாடத்திட்டம்**

**(i) பொது அறிவு மற்றும் நுண்ணறிவு -**

இலங்கை மற்றும் சர்வதேச மட்டத்திலான சமூக, பொருளாதார, கலாசார மற்றும் அரசியல் ரீதியாக முக்கியத்துவம் பெறும் நிகழ்வுகள் மற்றும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி தொடர்பாக அபேட்சகரிடம் இருக்கக் கூடிய அறிவினை பரீட்சித்தலே பொது அறிவு வினாக்களினால் எதிர்பார்க்கப்படுகின்றது. விண்ணப்பதாரியின் தர்க்கிக்கும் ஆற்றலினை அளவிடுதல் நுண்ணறிவு வினாக்களினால் எதிர்பார்க்கப்படுவதுடன் அவ்வினாக்களாவன எண்ணிக்கை, மொழியியல், வரிப்பட அமைப்பு மற்றும் இடைத் தொடர்புகள் என்பவை தொடர்பாக முன்வைக்கப்படும் விடயப்பரப்புக்களை கொண்டவையாகும்.

**(ii) நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் -**

நிர்வாக மற்றும் முகாமைத்துவ களத்தில் ஏற்படக் கூடிய நிகழ்வுகள்/பிரச்சினைகள் சில முன் வைக்கப்பட்டு அந்நிகழ்வுகளுக்கு / பிரச்சினைகளுக்கு உரிய துலங்கலை வெளிக்காட்டல் மற்றும் அந்நிகழ்வுகளை / பிணக்குகளை தீர்ப்பதற்கு அபேட்சகரிடமுள்ள கோட்பாட்டு மற்றும் நடைமுறை ரீதியான அறிவினை பரீட்சிப்பதனை நோக்கமாகக் கொண்ட வினாக்கள் முன் வைக்கப்படும்.

**(iii) ஆங்கில மொழித் தேர்ச்சி -**

இவ்வினாப்பத்திரமானது க.பொ.த.(சா/த) ஆங்கில வினாப்பத்திரத்திற்கு ஒத்த வகையில் தயாரிக்கப்படும். அதற்கு சமமான அறிவு இதனால் எதிர்பார்க்கப்படுகின்றது.

**(iv) இலங்கையின் பொருண்மை மற்றும் நடவடிக்கைமுறைச் சட்டங்கள்**

- அரசியலமைப்புச் சட்டம்
- தனியார் சட்டம்
- நீதியியற் சட்டம்
- சான்று கட்டளைச் சட்டம்
- தண்டனைச்சட்டக் கோவை
- குற்றவியல் சட்டக்கோவை
- குடியியல் சட்டக்கோவை

தொடர்பான அறிவு எதிர்பார்க்கப்படும்.

**குறிப்பு –** தெளிவற்ற கையெழுத்தைக் கொண்ட விடைப்பத்திரங்களுக்கான புள்ளிகள் குறைக்கப்படலாம்.

இவ்வினாப்பத்திரங்கள் பல்தேர்வு வினாக்கள், சுருக்க வினாக்கள், கட்டமைப்பு ரீதியான வினாக்கள், கட்டுரை வினாக்களை கொண்டதாகும்.

13. இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி வடிவங்களுக்கிடையில் முரண்பாடுகள் காணப்படுமாயின் அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கு அமைவாகவே செயற்படுதல் வேண்டும்.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எச்.எஸ். சோமரத்ன,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
கொழும்பு – 12,
2019, பெப்புருவரி மாதம் 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற பதிவாளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை (எழுத்து) – 2018 (2019)**

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

01. மொழி

பரீட்சைக்கு தோற்றும் மொழி

சிங்களம் - 2
தமிழ் - 3

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்.)

- வர்த்தமானி அறிவித்தலிற்கு அமைவாக விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்றுவதற்கு உத்தேசிக்கும் நகரம் மற்றும் நகரத்தின் இலக்கத்தினை குறிப்பிடுக. (பரீட்சை நிலையத்தை அமைக்கும் நகரம் மற்றும் நகர இலக்கம் என்பவற்றுக்காக அட்டவணை – 01 இனைப் பார்க்க.)

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| 1. | |
| 2. | |

02. பிரத்தியேக தகவல்கள் :

2.1 முழுப்பெயர் : ..........................................................................................................................................
(ஆங்கில கெபிடல் எழுத்துக்களில்)

2.2 முதலெழுத்துக்களுடன் பெயர் : திரு/திருமதி/செல்வி ..........................................................................
(முதலெழுத்துக்களை பின்னால் குறிப்பிடுக.)
(ஆங்கில கெபிடல் எழுத்துக்களில்) உதாரணம் : SRIWARDANA, A.P.K.

2.3 முழுப்பெயர் : ..........................................................................................................................................
(சிங்களத்தில் / தமிழில்)

2.4 அலுவலக முகவரி (ஆங்கில கெபிடல் எழுத்துக்களில்): (அனுமதி அட்டை இம்முகவரிக்கு அஞ்சலிடப்படும்.)
..........................................................................................................................................
..........................................................................................................................................

2.5 அலுவலக முகவரி (சிங்களத்தில் / தமிழில்) : ..........................................................................
..........................................................................................................................................

2.6 பிரத்தியேக முகவரி (சிங்களத்தில் / தமிழில்) : ................................................................................

...................................................................................................................................................

2.7 வசிக்கும் மாவட்டம் : ..................................................................................................

2.8 பால் நிலை : ஆண் - 0 பெண் - 1 [ ]

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்.)

2.9 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

2.10 சமூக அந்தஸ்த்து : திருமணமானவர் - 1 திருமணமாகாதவர் - 2 [ ]

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடுக.)

2.11 பிறந்த திகதி : .....................................

ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

2.12 2019.02.08 ஆந் திகதிக்கு வயது :

வருடங்கள் [ | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

2.13 தொலைபேசி இலக்கம் :

நிலையானது : ......................... கையடக்க தொலைபேசி : ...............

03. கல்வித் தகைமைகள் :

(அ) உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த திகதி : ..............................

(ஆ) விண்ணப்பதாரி பட்டதாரி எனின்,

1. பட்டம் : .................................
2. பட்டப்படிப்பினை பூர்த்தி செய்த திகதி : .................................
3. பல்கலைக்கழகம் : ...................................

(இ) அதற்குச் சமமான கல்வி அல்லது தொழிற் தகைமைகள் :

1. பல்கலைக்கழகம் / நிறுவனம் : ...............................................
2. தகைமைகள் : ......................................................
3. தகைமைகளை பூர்த்தி செய்த திகதி : ..............................................

04. வேறு தகைமைகள் : ...............................................................................................................

..............................................................................................................................

05. நீங்கள் எப்போதாவது நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா ?
(உரிய கூட்டினுள் ( √ ) அடையாளமிடுக.

ஆம் [ ] இல்லை [ ]

..............................................................................................................................

..............................................................................................................................

06. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள் :

பரீட்சைக்கட்டணம் செலுத்திய அலுவலகம் : ..................................

பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி : ....................................

செலுத்திய பணம் : ..................................

| |
|---|
| பற்றுச்சீட்டினை அகற்ற முடியாதவாறு ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் பிரதியொன்றினை உங்கள் வசம் வைத்திருப்பது பயன்மிக்கதாய் இருக்கும்.) |

07. விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்தல் :

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் சரியானதும் உண்மையானதும் என தெரிவித்துக் கொள்கின்றேன். இதில் யாதேனும் பகுதிகள் நிரப்பப்படாமல் மற்றும் / அல்லது பிழையாக நிரப்பப்படுவதனால் ஏற்படக் கூடிய விளைவுகளை பொறுத்துக் கொள்வதற்கு இணங்குகின்றேன். மேலும் இவ்விண்ணப்பப்படிவத்தின் அனைத்து பகுதிகளும் சரியான முறையில் நிரப்பப்பட்டுள்ளன என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஆ) என்னால் வழங்கப்பட்ட கூற்று பிழையானது என நிரூபிக்கப்பட்டால், நியமனம் பெறுவதற்கு முன்னர் தகைமையற்றவர் ஆவதற்கும் நியமனம் பெற்ற பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படவும் முடியும் என்பதனை நன்கறிவேன்.

(இ) மேலும், பரீட்சையை நடாத்துவதுடன் தொடர்புடையதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டவிதிகளுக்கு நான் கீழ்படிகின்றேன் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஈ) இதில் குறிப்பிடப்பட்டுள்ள எந்த தகவலிலும் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன்.

......................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : .............................

08. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.

இவ்விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் திரு/திருமதி/செல்வி ............................. என்பவரை பிரத்தியேகமான முறையில் நன்கறிவேன் என்பதனையும் எனது முன்னிலையில் ........................ திகதி அவரது கையொப்பத்தை இட்டார் என்பதனையும் உரிய பரீட்சைக்கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்பதனையும் அப்பற்றுச்சீட்டை உரிய இடத்தில் ஒட்டியுள்ளார் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.

.............................................
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி : .............................

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப்பெயர் : ...........................
பதவி : .....................................................
முகவரி : ................................................
(உத்தியோகப்பூர்வ முத்திரையினால் உறுதிப்படுத்துக.)

திணைக்களத் தலைவரின் விதந்துரை

இந் ........................................... சேவையாற்றும் திரு/திருமதி/செல்வி ......................... என்பவர் இலங்கை நீதிமன்ற பதிவாளர் சேவையின் தரம் III இற்கு விண்ணப்பிப்பதற்கு தேவையான தகைமைகளைக் கொண்டுள்ளார் என்பதனையும், இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் என்பதனையும்,

என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதனையும் தெரிவித்து இவ்விண்ணப்பப்படிவத்தை விதந்துரைத்து இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

..................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்,
உத்தியோகப்பூர்வ முத்திரை.

அட்டவணை – I

| **நகரம்** | **நகர இலக்கம்** |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| அம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| வவுனியா | 12 |
| முல்லைத்தீவு | 13 |
| கிளிநொச்சி | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருநாகல் | 18 |
| புத்தளம் | 19 |
| அநுராதபுரம் | 20 |
| பொலன்னறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொனராகலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கேகாலை | 25 |

2-560

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.